2019 ஜூலை 19]

144—

குழந்தைகளைத் தத்தெடுத்தல்

***25012—திரு. வாகை சந்திரசேகர்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர் குடும்பத்தில் உள்ள *ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள், எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர் குடும்பத்தில் உள்ள *ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுக்க அரசு முன்வருமா என்ற வினாவை எழுப்பியுள்ளார்.

எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர் குடும்பத்தில் பிறந்த *ஆதரவற்ற குழந்தைகளை சமூக நலத் துறையின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் நிதியுதவியுடன் செயல்பட்டுவரும் 21 தத்து வள மையங்கள்மூலம் தத்து வழங்கும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்பது பழமொழி.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[2019 ஜூலை 19

"மலர்ந்தும் மலராத பாதி மலர் போல
வளரும் விழி வண்ணமே
வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலை சீவி
நடந்த இளந் தென்றலே"

இது பிறந்த குழந்தையைப் போற்றிப் பாடும் கவியரசு கண்ணதாசனின் வரிகள். இன்று அந்தக் குழந்தையின் உதிரத்தில் எச்.ஐ.வி. 'தன்வினை தன்னைச் சுடும்', 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' போன்ற இந்த வரிகள் எல்லாம், அந்தக் குழந்தையின் முகம் பார்த்து கதறி அழுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்துவிட முடியாது. தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவுவது, குழந்தைகள் எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்படுவதற்கு முதல் காரணம் என்று அறியப்படுகிறது. தாயின் கருவறையிலோ, குழந்தை பிறக்கும் சூழலிலோ, பிறந்த பின், தாய்ப்பால் மூலமாகவோ, எச்.ஐ.வி. நோய் பரவுகிறது. எச்.ஐ.வி. நோயை முற்றிலும் குணப்படுத்த விஞ்ஞானம் முயன்று கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் நோயைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு, நீண்டகாலம் நலமுடன் வாழ வைப்பதில் மருத்துவம் வெற்றி பெற்றிருக்கிறது. எல்லாவற்றையும்விட, எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எதிர்காலம் வளம்பெற, அடைப்பட்டு கிடக்கும் இரண்டு கதவுகளை நாம் திறக்க வேண்டும். ஒன்று, பாதிக்கப்பட்ட குழந்தையைத் தனிமைப்படுத்தாமல் எல்லோரிடமும் பழக வாய்ப்பளிக்க வேண்டும். பள்ளியிலே மற்ற மாணவர்களுடன் சேர்ந்து பயில்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அந்தக் குழந்தையிடம் எல்லோருமே அன்போடு, "உனக்கு இது ஒன்றுமே இல்லை; இது உன்னால் உருவாக்கப்பட்டதல்ல; இது நீ கொண்டு வந்தது அல்ல; நாம் எல்லோரும் ஒன்று; நீ எங்களோடு ஒருவர்" என்று அன்பைக் காட்ட வேண்டும். இது ஒன்று. மற்றொன்று, இந்த சமூகம். எச்.ஐ.வி. என்று சொன்னாலே மிரண்டுபோகின்ற மக்கள். எச்.ஐ.வி. என்றாலே தீண்டத்தகாதவர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், கேள்வியாகக் கேளுங்கள். பெரிய விளக்கத்தை சொல்ல வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: ஆதலால், இது மிகவும் சாதாரண ஒரு விஷயம். Diabetes அதாவது, சர்க்கரை நோய் போன்றது. சர்க்கரை நோய் வந்தால் அது lifelong-ஆக நம்முடன் இருக்கிறது. அதுபோன்று, இதுவும் இருக்கிறது. சர்க்கரை நோய்க்கு மாத்திரை

2019 ஜூலை 19]

எடுத்துக்கொள்வது போன்று, இதற்கும் மாத்திரை, மருந்து எடுத்துக்கொண்டு நீண்டகாலம் உயிர் வாழலாம். உடல் உறுப்புகள் இல்லாதவர்களை சிலர் கிண்டல் செய்து கொண்டிருந்தனர். ஆனால், கலைஞர் அவர்கள், அவர்களுக்கு 'மாற்றுத் திறனாளி' என்று பெயரை வைத்தவுடனே, அவ்வளவு பேருக்கும் புத்துணர்ச்சி வந்து, உத்வேகம் அடைந்து (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்தார்கள். அதேபோல, இருபாலினத்தவரை 'திருநங்கை' என்று சொல்வதனால், இன்றைக்கு அவர்கள் பெரிய வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அதுபோல, இந்த அரசு எந்தப் பாவமும் அறியாத எச்.ஐ.வி.-யால், வியாதியோடு பிறக்கின்ற அந்தக் குழந்தைகளுக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் வைத்த பெயரைப் போல, இந்த அரசு நல்ல பெயரை வைக்க வேண்டும் என்று நான் இங்கே வேண்டுகோளாக தங்கள் வாயிலாக வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த குடும்பத்தில் பிறந்த *ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுப்பது குறித்ததாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த பெற்றோர்களுக்குப் பிறந்த *ஆதரவற்ற குழந்தைகள், இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, பிரிவு 31-ன்படி குழந்தைகள் நலக் குழுவின் முன்பு முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள். இக்குழந்தைகள் நோய் பாதிப்பில்லாத நிலையில்,* after medical checkup, *6 வயதிற்குட்பட்டவராக இருப்பின், மற்ற ஆதரவற்ற குழந்தைகளைப் போலவே, தத்துவள மையங்களில் அனுமதிக்கப்பட்டு,* Central Adoption Resource Authority *விதிகளின்படி,* prospective adoptive parents *கண்டறியப்பட்டு தத்துக்கு வழங்கப்படுகிறார்கள். 6 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளானால், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் சிறார்களாகக் கருதப்பட்டு, குழந்தைகள் நலக் குழுவின்மூலம் குழந்தை இல்லங்களில் அனுமதிக்கப்பட்டு, அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு இந்த அரசாங்கம் சிறப்பாக வழிவகைகளைச் செய்து வருகிறது. எச்.ஐ.வி. நோயினால்*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

பாதிக்கப்பட்ட குழந்தைகளாக இருப்பின், சிறப்புக் கவனம் தேவைப்படும் சிறார்களாகக் கருதப்பட்டு, குறிப்பாக, திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு நிதியுதவியுடன் செயல்பட்டுவரும் Community Health Education Society என்ற தொண்டு நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சை மற்றும் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த நிறுவனத்தில் HIV positive என்று உறுதி செய்யப்பட்ட 71 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே ஒட்டுமொத்தமாக HIV நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 15 வயதுக்குட்பட்டவர்கள் ஒரு இலட்சத்து இருபதாயிரத்திலிருந்து ஒன்றரை இலட்சம் பேர் வரை இருக்கிறார்கள். இதில் எத்தனை பேரை நாம் தத்தெடுக்க முடியும்? மீதமுள்ளவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்களா என்ற கேள்வி எழுகிறது. தங்களின் தவறான உணர்வுக்கு அடிமைப்பட்டு தீராத நோயைப் பெற்று, வெளியே தெரியாமல் சமுதாயத்தில் ஊடுருவிக் கிடக்கும் மனிதர்கள் தண்டிக்கப்படுவதில்லை. எந்தப் பாவமும் அறியாத இந்தக் குழந்தைகள் பிறக்கும்போதே தண்டனையோடு பிறக்கிறார்கள். ஆகவே HIV உள்ள குழந்தைகள் வாழ்வு வளம்பெற ஒன்றே ஒன்றுதான் அவசியம். அது combination of drugs, love and support. மருந்து காப்பாற்றுவதைவிட நாம் கொடுக்கும் love and support தான் அவர்களுக்கு நீண்டகால வாழ்க்கையைக் கொடுக்கும். அதை இந்தச் சமுதாயம் செய்திட மனித நேய விழிப்புணர்வை இந்த அரசு மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல HIV நோயினால்

பாதிக்கப்பட்ட பெற்றோர்களையோ அல்லது குழந்தைகளையோ சமுதாயத்தில் சரிசமமாகக் கருத வேண்டும் என்பதில் மாறுபட்ட, வேறுபட்ட கருத்து நம் யாருக்கும் இருக்க வாய்ப்பில்லை. இந்த HIV நோய் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற பொறுப்பும் கடமையும் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டங்களாலோ அல்லது திட்டங்களாலோ மட்டுமே நாம் இந்தச் சமுதாய உணர்வை மாற்ற முடியாது. HIV நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சமூக நலத் துறையின்மூலம் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்கீழ் கொடுக்கப்படுகின்ற நலத் திட்டங்களுடன், மக்கள் நல்வாழ்வுத் துறையின்மூலம் AIDS Control Society, Egmore-ல் exclusively for HIV நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்காக, irrespective of the age, 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அந்தக் குழந்தைகளுடைய மருத்துவம், கல்வி, உணவு மற்றும் உயர் கல்வி போன்ற அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. மக்கள் நல்வாழ்வுத் துறையோடு சமூக நலத் துறையும் சேர்ந்து திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குக் கூடுதலாக ஒரு தகவல் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து கருத்துகளையும் சொல்லிவிட்டார்கள். அதாவது mother-to-child ஒரு தாய்க்கு HIV பாதிப்பு இருந்தால் பிறக்கக்கூடிய குழந்தைக்கு அந்த நோய்த்தொற்று இல்லாத நிலை உலக அளவில் கியூபாவுக்கு அடுத்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது நல்ல கருத்து. தாய்க்கு அந்தத் தொற்று இருந்தால், பிறக்கக்கூடிய குழந்தைக்கு அந்தத் தொற்று இல்லாத நிலையை தமிழகத்தில் உருவாக்கியிருக்கின்றோம். இதற்கு Nevirapine என்ற ஓர் அருமையான மருந்து இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மாண்புமிகு உறுப்பினரின் கவலைக்கும் மருந்தாக அமையும் என்ற பதிலையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "என்னுடைய ஆட்சி இருக்கும்வரை தமிழகத்தில் ** என்கிற வார்த்தைக்கே இடமில்லை, 'ஆதரவற்றோர்' என்று அழைக்கப்பட வேண்டுமென்று" அறிவுறுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலும், நான் சொன்னதிலும் இருக்கின்ற ** என்கிற வார்த்தைக்குப் பதிலாக 'ஆதரவற்ற' என்கிற வார்த்தையை இணைத்துக் கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'ஆதரவற்ற' என்று மாற்றப்படுகிறது.

முற்பகல் 10-35

வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

145—

நெல் கொள்முதல் நிலையம்

***48439—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.